2026 மார்ச் மாதம் 05– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 12/2020

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05– ஆம் தேதி வியாழக்கிழமை

திரு.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW14 – சந்துருபாலாஜி |
| தகப்பனார் பெயர்: | சிவக்குமார் |
| ஊர்: | அறந்தாங்கி |
| வட்டம்: | அறந்தாங்கி |
| மாவட்டம்: | புதுக்கோட்டை |
| தொழில்: | சார்பதிவாளர், கூட்டுறவுத்துறை, அறந்தாங்கி |
| வயது : | 38 |

05.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்போது அறந்தாங்கி, கூட்டுறவுத்துறையில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2019ம் தேதி தேனி மாவட்டம், ஆண்டிபட்டி காவல்நிலையத்தில் IIம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் மதியம் 1.30 மணியளவில் காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் குற்ற எண்.109/2019 பிரிவுகள் 279, 304ஏ, 304(2) இ.த.ச.–ன்படியான வழக்கு சம்பந்தமாக வாகன விபத்தில் இறந்துபோன சென்றாயன் என்பவரின் மகன் மணி (எ) மணிச்சாமி (வயது 13) என்பவரின் பிரேத பரிசோதனை அலுவலராக நியமிக்கப்பட்டு, கடவுச் சீட்டு பெற்று,

க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று, மருத்துவர் பிரியா மூலம் பிரேத பரிசோதனைக்கு அங்க, மச்ச அடையாளம் சொல்லி பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்தும், பிரேத பரிசோதனை முடித்தப்பின்பு, உடலை உறவினர் சதீஷ் என்பவரிடம் ஒப்படைத்து காவல்நிலையம் வந்து, ஆய்வாளரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன். உடல் கூறாய்வின்போது எடுத்த விசிராவை க.விலக்கு மருத்துவமனையில் ஆய்விற்காக ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** – குறுக்கு விசாரணை இல்லை என 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.03.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.05 20:20:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
05.03.2026